# ஞல விவேகி.

மலர்-1 இதழ்-4.

ஜூலை, ஆகஸ்டு-1927.

ஜ9.

JL
J684m211,N27
N27.1.4.
159607

650

Registered No. M. 2260.

168.

பிரபவ ௵ | ஆடி ௴
மலர் I | இதழ்

OFFICE OF THE REGISTRAR
1-NOV 1927
MADRAS

# ஏல விவசாயி

திருவாங்கூர் ஏல விவசாயிகள்
சங்கத்தி லிருந்து வெளிவரும்
ஒரு மாதப் பத்திரிகை.

THE
# CARDAMOM PLANTER,
**THE ORGAN**
**of**
**The Travancore Cardamom**
**Planters' Association.**

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## பொருள் அடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பக்தி | 105 |
| 2. | நமது தேர்தல் | 106 |
| 3. | உத்தமபாளையம் தாலுகா | 113 |
| 4. | உத்தமபாளையம் தாலுகா போர்டு | 115 |
| 5. | ஏல விவசாயிகளுக்கு ஏற்ற தொண்டு | 125 |
| 6. | ஏலக்காய் ஏற்றுமதி | 133 |
| 7. | விவசாயப் பழமொழிகள் | 140 |


### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| அங்கத்தினர் அல்லாதவருக்கு சந்தா | ரூ. | 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு | ரூ. | 2—8—0 |

குறிப்பு:—

வியாசம் எழுதுவோர்கள் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். விஷயங்களுக்கு வியாசதாரிகளே பொறுப்புதாரி.

168.


# ஏல விவசாயி.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.



1-NOV 1927
MADRAS


ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?

(பாரதியார்)


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.



| | | |
|---|---|---|
| மலர் 1 | உத்தமபாளையம். பிரபவ ஸு ஆடி மீ 1927 ஸு ஜூலை-ஆகஸ்டு மீ | இதழ் 4 |


### பக்தி.

கல்வி வளரும்—பல
காரியங் கையுறும் வீரிய மோங்கிடும்
அல்ல லொழியும்—நல்ல
ஆண்மை யுண்டாகும் அறிவு தெளிந்திடும்
சொல்லுவ தெல்லாம்—மறைச்
சொல்லினைப் போலப் பயனுள தாகுமெய்
வல்லமை தோன்றும்—தெய்வ
வாழ்க்கையுற் றேயிங்கு வாழ்ந்திட லாமுண்மை.

(பாரதியார்)

159607
568 ... N27
N27.1.4.

# நமது தேர்தல்.

ஒவ்வொரு கிளைச் சங்கத்தார்களும் அவரவர்கள் ஊரில், ஆண்டு விழாவை யாரோ ஒரு அறிஞரின் அக்ராசனத்தின்கீழ் நடத்தி, அத்துடன் வருடாந்திரப் பொதுக் கூட்டமும் சேர்த்து நடத்தி, அதில் அநேக தீர்மானங்களை நிறைவேற்றிக் கடைசியில் நிர்வாக சபை அங்கத்தினர்களையும், அவர்களில் உத்தியோகஸ்தர்களையும் தெரிந்தெடுப்பது சங்கம் உண்டானது முதல் இதுவரையில் வரும் வழக்கமாகவிருக்கிறது. தலைமைச் சங்க வருடோற்சவமும், பொதுக்கூட்ட விஷயங்களும் குறிக்கப்பட்ட இடத்தில் மேற்காட்டிய விதமே. ஏல விவசாயிகளுக்கெல்லாம் வருட விழாக்களும், வருஷாந்திரப் பொதுக் கூட்டங்களும் அதிக ஆனந்தத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டுவதால், இவைகளை இவர்கள் ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்ப வருடத்தில் இக்கூட்டங்களைப் பற்றிக் கவனியாது இருந்து விட்டார்கள். நாளடைவில் உண்மையை அறிந்து, உற்சாகத்துடன் நடத்தத் தொடங்கினார்கள். பின்பு, இவைகளில் பிரத்தியேகக் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் ஏல விவசாயிகளினுடைய அபிப்பிராயங்களை அறியவும், வெளியிடவும் ஏற்ற இடங்களாயிருக்கின்றன என்று ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நன்கு புலனாயிற்று. நமது தாலுகா மகா நாட்டைத் தவிர்த்து, நமது தலைமைச் சங்கத்தின் விழாவே நமது தாலுகாவிலேயே சிறந்தது; அதிக ஜனக் கூட்டம் கொண்டது.



நிர்வாக சபை மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பெயரும், புகழும் பெறலாமென்று, எண்ணிச் சிலர் சங்கம் ஆரம்பமாகிய இரண்டாவது ஆண்டிலிருந்து இரகசியமாகப் போட்டி போட முன் வந்திருக்கிறார்கள். அதற்கேற்றாற்போல் ஏலக் கிருஷிகர்களும் "அவரை எடுங்கள், இவரை எடுங்கள்; இவர் இப்படிப்பட்டவர், அவர் அப்படிப்பட்டவர்; இவர் இல்லா விட்டால் ஒன்றும் முடியாது; அவர் இல்லாவிட்டால் இரண்டும் முடியாது." என்று சொல்லித் தோன்றியபடியெல்லாம் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுத்தார்கள். இத்தெரிந்தெடுப்புகளில் உண்மை உழைப்பாளிகளில், பொதுநலத் தொண்டர்களில், சங்கத்திற்கு உழைத்து, பற்பல நலன் செய்திருக்கிறவர்களில், அநேகர்கள் கைவிடப் பட்டார்களென்று சொல்லாமலிருக்க முடியவில்லை. தேர்தல்களில் தவறுகள் செய்ததின் பயனாகச் சில விடங்களில் ஏலக்குடிகளுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டன, ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை எவர் எவ்விதத்தில் மறுக்கமுடியும்? அவர்கள் செய்த குற்றங்களுக்காக அவர்களே அனுபவிக்கிறார்கள். அவரவர்களுக்கு இருக்கும் உரிமைகளை உபயோகப் படுத்தாததின்பயனை அடைகிறார்கள். அவரவர் சொந்த ஜோலிகளில் மட்டும் சலியாது, சந்தோஷமாய் உழைத்துச் சமூகப் பொது வாழ்வில் உயர்ந்துகொண்டிருப்பதுடன், பல நிர்வாகசபை அங்கத்தினர்கள் அவரவர்கள் ஸ்தானங்களைப் பூர்த்தி செய்து கொண்டிருக்க, அதிர்ஷ்ட வசத்தால் சில ஊர்களில் சிலர் உண்மையுடன் வேலை செய்து கொண்டிருந்ததாலும், நல்ல காலத்தால் ஏலக்காய் நல்ல விலைக்கு விற்கப்பட்டுக் கொண்டிருந்ததாலும் எல்லாக் காரியங்களும் கடவுள் கிருபையால் செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருந்தன. திடீரென்று ஏலச் சரக்கின் விலை குறைந்தது. ஏலத் தோட்டக்காரரிடையில் பணத் திண்டாட்டம் என்ற ஜ்வாலை வீச ஆரம்பித்தவுடன், சங்கம் ஏற்படுவதற்கு முன் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையெல்லாம் மறந்து விட்டுச் சங்கத்தின் மீது சாடி, மறைமுகமாகக் குறை கூற ஆரம்பிக்கவே, வேலை செய்ய மனமற்ற, திறமற்ற, ஸ்திர

மற்ற நிர்வாகிகளில் சிலர் இன்னதுதான் செய்வதென்று தெரியாது திகைத்துப் போய் விட்டார்கள். கஷ்டப்படும் ஏலக்கிருஷிகர்களுக்குத் தைரியங்கூடச் சொல்ல முன் வராவிட்டாலும் குறைந்தது "என்ன, ஏன்" என்று கூடக் கேட்க விரும்பவில்லை. ஏதேனும் முக்கிய, அவசர விஷயங்களைக் கவனிக்கும் பொருட்டு, நிர்வாகக் கூட்டம் நடைபெற்றால், தங்களுடைய ஆலோசனைகளைக்கூடச் சொல்ல வருவதில்லை. "ஊணுக்கு நான், உழைப்பிற்கு அவர்; புகழ்ச்சிக்கு நான், இகழ்ச்சிக்கு அவர்; இலாபத்திற்கு நான், நஷ்டத்திற்கு அவர்; கௌரவத்திற்கு நான், அகௌரவத்திற்கு அவர்" என்ற எண்ணம் கொண்டு "இவர் வந்தால் போதும், அவர் வந்தால் போதும்; ஏதோ வந்தமெம்பர்களை வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்யுங்கள்" என்று கூறிவிட்டுக் கடைசியில் தாங்களும் வராமல் நடந்துபோன விஷயங்களில் குற்றங் கண்டுபிடித்து "இப்படியா செய்து விட்டார்கள்? அப்படியா செய்வது?" என்று குறைகூறும் நிர்வாக அங்கத்தினர் சிலர் இல்லாமலில்லை.

சரக்கின் விலைக் குறைவான இக்காலத்தில் ஏல விவசாயிகளின் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காக என்ன, என்ன வேலைகள் செய்திருக்கிறார்கள் என்று ஒவ்வொரு நிர்வாகரும் நெஞ்சில் கை வைத்து யோசிக்கட்டும். பரோபகாரத்தின் பொருட்டு எவரெவர் தங்கள் தங்கள் வேலைகளையெல்லாம் கொஞ்சக் காலமேனும் தியாகம் செய்தார்கள் என்பதை எண்ணி எண்ணிப் பார்க்கட்டும். தம் தம் சுதந்திரத்தை உபயோகிக்காது, தேர்ந்தெடுக்கும்பொழுது தவறிவிட்டுப் பின்னர் ஏல விவசாயிகள் தலைவர்களையும், உழைப்பவர்களையும், உத்தியோகஸ்தர்களையும் கடைசியில் சங்கத்தையும் குறை கூறுவது, குற்றம் சாட்டுவது மிக மிகப் பிற்போக்கான முறையாகும். இவ்வாறு சொல்லுவது அறமுமன்று; அழகுமன்று. தலைவர்களையும், உழைப்பாளர்களையும் உற்சாகித்து, சந்தோஷிப்பித்து, வேலைகளை நிறைவேற்றிக் கொள்ளவேண்டியது தங்கள், தங்கள் கடமை யென்பதை



அறவே மறந்துவிட்டுக் குறை கூறுவதானது சங்கத்தின் அபிவிருத்தியைக் கெடுத்ததாகும்.

அநேக அங்கத்தினர்கள் சேர்ந்துதான் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் என்ற உருவம் உண்டாகியிருக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உரிமை உண்டு; உழைக்க உழைப்பும் உண்டு. யாருக்கு வந்த விருந்தோவென்று அங்கத்தினர்கள் இருந்து விடாது, நிர்வாகஸ்தர்களைக் குறை கூறாது, "எங்கள் சங்கம், எங்கள் சங்கம், என் சங்கம்" என்று அவ்வளவு சொந்தம் பாராட்டி, உழைக்க முன் வாருங்கள். இன்றே புறப்படுங்கள். அதுவும் இப்பொழுதே புறப்படுங்கள் என்ற வீரத்தமிழர் கபிலர் கருத்தைக் கவனியுங்கள். சங்கம் உங்களைக் கூவிக்கூவி அன்புடன், ஆத்திரத்துடன் அழைக்கிறது. அதற்குத் தயவு செய்து செவி கொடுங்கள். இச்சங்கம் இன்றளவும் நிலைத்திருப்பதானது சிலருடைய அபார, உறுதியான உழைப்பாலல்லவா என்று இங்குக் கூறவேண்டுவது அவஸியமின்று.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் ஆழ்ந்து, ஆழ்ந்து ஆலோசிக்கும் காலம், அவர்களுடைய அறிவைச் சோதித்துப் பார்த்து, நல்லறிவை உபயோகிக்கும் காலம், திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கமும், வேண்டிய அதன் கிளைச் சங்கங்களும் நன்கு நடைபெறுவதற்கு வேண்டிய ஏதுக்களை ஏற்படுத்தி அமைக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. "எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவமென்பது இழுக்கு." என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவ நாயனாரின் ஒப்பிலா மணிவாசகத்தைத் தங்கள் நினைவுக்குக் கொண்டுவருகிறேன். ஒவ்வொரு அங்கத்தினரும் தத்தம் பொறுப்பை உணர்ந்து, உண்மை வழியில் நின்று, தங்கள் தங்கள் உரிமைகளை உபயோகப்படுத்த ஞாபகப்படுத்துகிறேன். அன்பாகவும், வினயமாகவும் கேட்டுக்கொள்கிறேன். அங்கத்தினர்களுடைய கடமை இன்னது என்று நினைப்பூட்டுவது என்கடமையாகும்.

யவர்கள், ஏல விவசாயிகளின் குறைகள் என்ன, என்ன என்பதை அறிந்து, அவைகளை நிவர்த்திக்கப் பலவழிகளில் பாடுபடக்கூடிய திறமை வாய்ந்தவர்களோ, அவர்களையே நிர்வாகிகளாகத் தெரிந்தெடுக்கவேண்டும். ஏல விவசாயிகளின் நன்மைகளை நாடி, உழைக்கக்கூடியவர்களென்று யாரிடத்தில் நம்பிக்கையிருக்கிறதோ, அவர்களுக்கு அவசியம் ஆதரவு அளிக்கவேண்டும். உண்மையில் உறுதியும், உழைப்பில் ஊக்கமும் கொண்ட அஞ்சா நெஞ்சு படைத்த அறிஞர்களை, அரும் பெரும் நியாயவாதிகளை, ஏல விவசாய விற்பன்னர்களை, ஏலத்தை விற்பனை செய்யும் விஷயத்தில் வீரர்களை, பரோபகாரத் தொண்டர்களைத் தேர்தல்செய்ய முற்படவேண்டும். நிர்வாக சபையில் அங்கம் வகிக்கப்போகும் ஒவ்வொரு அபேட்சகருடைய ஆதி சரித்திரத்தைக்கொண்டும், இதுவரையிலும் அவரவர்கள் செய்திருக்கும் பரோபகாரத் தொண்டைக்கொண்டும், இவர்கள் ஏல விவசாயிகளுக்கு உழைக்கக்கூடியவர்களா? இவர்களுக்கு ஏலக் குடியானவர்களுக்காகப் பாடுபட ஆற்றலும், அறிவும், ஆசையும் இருக்கின்றனவா? என்பவை போன்ற கேள்விகளால் ஆழ்ந்து, ஆராய்ந்து, அறிந்து யோக்கியதை உள்ளவர்களையே நிர்வாகிகளாகத் தெரிந்தெடுக்க வழி தேடவேண்டும். ஏல விவசாயிகளில் சிலர் செல்வச் சீமான்களாக இருக்கிறார்கள். அவர்களிலும் உண்மை உழைப்பாளிகள், உத்தமர்கள் இருக்கிறார்களாகையால், அவர்களையும் மறந்து விடாதேயுங்கள். ஒரு விஷயத்தை மனதில் வைத்துக்கொண்டு மற்றொரு காரியத்தைச்செய்து விடாதேயுங்கள். விசால நோக்கத்துடன் ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள், சில விஷயங்களுக்காகப் பயந்து கொண்டு ஒரு காரியத்தைச் செய்வதானது ஜன நாயகத்துக்கு விரோதமாகவும், மனச் சாட்சியை விற்றதாகவும் கருதப்படும். ஆகையால் ஏல விவசாயக் கனவான்களே, உங்கள் கடமைகளை ஒழுங்கான முறையில் சத்தியத்தின் பெயரால் செய்யுங்கள். அப்பொழுது எல்லா ஏல விவசாயிகளும் பயனடைவார்கள்.



கண்ணிய மிக்க நிர்வாகிகளாகவரும் கனவான்களே! நீங்கள் அடைந்த ஸ்தானத்தை அடையாத ஆயிரக்கணக்கான மக்களுடைய நலங்களைக் காக்கும் பொறுப்பு உங்கள் தலைமேல் சுமத்தப்பட்டிருப்பதை நீங்கள் உணரல்வேண்டும். நிர்வாக சபையில் அங்கம் பெற்றிருப்பது உங்களுடைய சொந்தப் பிரயோஜனத்திற்காகவல்ல என்பதையும், உங்களுடைய கௌரவத்திற்காகவல்ல என்பதையும் அறியுங்கள். ஏல விவசாயிகளின் பொருளாதாரம் உங்கள் கைக்குள்ளேயே இருக்கிறது. அவர்களுடைய முன்னேற்றமும் அப்படியே அடங்கி இருக்கிறது. விளைவுக் குறைவாலும், விலைக்குறைவாலும் வருத்தத்தால் வாடி வதங்கிக் கிடக்கும் ஏல விவசாயிகள் உங்கள் முகங்களை நம்பிக்கையுடன் பார்க்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் என்னதான் செய்யப் போகின்றீர்கள்? என்பதை ஏல விவசாயிகள் உலகம் விழிப்புடன் கவனித்துக்கொண்டிருக்கிறது. உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மேலான கௌரவத்தை, உயர்ந்த செல்வாக்கை, நல்ல சக்தியை நன்மையை நாடி, நன்மையான வழிகளில் உபயோகப்படுத்துங்கள். இச் சங்கத்தின் மூலம் உங்கள் உயரிய, உண்மை உழைப்பால், உயர்வை, புண்ணியத்தை அடையுங்கள். நமது தவத்தாய் நாட்டில் வேரூன்றியிருக்கும் வறுமைப்பிணியால்—தரித்திரக் கொடுமையால், நம் புராதனப், புனித பூமியாம் பரத கண்டத்தில் கோடிக்கணக்கான ஏழைச் சகோதர, சகோதரிகள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறங்க உறைவிடமின்றி வருந்தி, அலைந்து கொண்டிருக்கும் பொழுது, நாட்டுப் பற்றுடைய எவர் தான் மௌனமாக இருக்க முடியும்? இச் சங்கத்தின் மூலம் சில ஆயிரக்கணக்கான ஜனங்களுடைய முன்னேற்றத்துக்காவது வேலை செய்யலாமல்லவா. "அவர் செய்வார், நம்மால் என்ன ஆகும்?" என்று ஏமாந்து உங்களுடைய கடமைகளைச் செய்யாது விட்டுவிடவேண்டாம். தலைவர்களாகிய நீங்கள் முன் வந்து உடனிருந்து, வேலைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுவது உங்கள் கடமையாகும். உண்மைக்காகப் போராடுங்கள். வேலைக்குத்தகுந்த கூலி என்ற இயற்கைச் சட்டத்தை எவர் மறுக்க முடி

விளைந்த விளைவை விற்பனை செய்வதிலேயே உங்களுடைய அரிய கவனமெல்லாம் சென்று கொண்டிருக்கின்றன. விளைவிப்பதிலும் பிரத்தியேக கவனம் செலுத்துமாறு ஞாபகப் படுத்துகிறேன். விளைந்தாலல்லவோ விற்பனை. விலையாக்கும் விஷயத்தில் அரிய, பெரிய வேலைகளெல்லாம் அபாரமாகச் செய்திருக்கிறீர்கள். அவைகளுக்காக இச்சங்கம் என்றும் நன்றி பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. விற்பனைக் கமிட்டி இருக்கிறது. அது அதனைப் பார்த்துக்கொள்ளும். ஏல விவசாயத்தை விர்த்தி செய்யும் நூதன முறைகளைக் கண்டு பிடிக்கவும், ஏலச் செடிகளை அரித்துத் தின்று அழிக்கும் பூச்சிகளையும், புழுக்களையும் அகற்றவும், ஏலச்செடிகளுக்கு வந்துள்ள தொத்து நோய்களைத் தொலைக்கவும், இவை சம்பந்தமான புஸ்தகங்கள் எழுதவும், இன்னும் ஏல விவசாய அபிவிர்த்தியைப் பற்றிய சகல வேலைகளைச் செய்யவும் பல அறிஞர்களை, ஏல விவசாயத்தில் அநுபவ மிக்க விற்பன்னர்களை, ஆராய்ச்சிக்காரர்களை நிர்வாக சபையில் தெரிந்தெடுத்தோ அல்லது பிரத்தியேகமாக நிர்வாக சபையால் கௌரவமாக நியமித்தோ அவர்கள் அடங்கிய விவசாய சபை ஒன்று உட்சபையாக (Sub-committee) அமைத்து, அச்சபையை உபயோகித்துப் பயனடையுங்கள். விளைவிப்பதைக் காட்டிலும் விற்பதில் மிக மிகக் கஷ்டம் இருக்கிறதென்பதை ஏல விவசாயிகள் அனைவரும் ஒப்புக்கொண்ட போதிலும் இந்த விவசாய சபையும் அத்யாவஸ்யமாக இருக்க வேண்டியதுதான். பிரசுர சபையையும், பிரசார சபையையும் இன்னும் இவை போன்ற பற்பல உட்சபைகளையும் உடனே ஏற்படுத்தி, உழைக்க வழி தேடுங்கள்; வழி காட்டுங்கள்; வழி கொடுங்கள். இவ்வாறு பலப்பல காரியங்களை இலகுவிற் செய்து, ஏல விவசாயிகளை முன்னுக்குக் கொண்டுவாருங்கள். ஆகையால் எழுமின்! இன்றே எழுமின்!! உழைமின்! உழைமின்!! ஓயாது உழைமின்!!!

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.



## உத்தமபாளையம் தாலுகா.

உத்தமபாளையம் தாலுகா, உத்தமபாளையம் தாலுகா என்று புதிதாக ஏற்பட்ட இத்தாலுகாவின் பெயரைச் சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன். ஜ[illegible]மீ ''முதல் தேதியிலிருந்துதான உத்தமபாளையம் தாலுகாவாக ஏற்பட்டிருக்கிறபடியால், இவ்விஷயம் சிலருக்குத்தெரிந்தும், பலருக்குத்தெரியாமலுமிருக்கலாம். பழைய தாலுகாவின் பெயர் மறையப் பல நாட்கள் ஆகும்.

நீர்வளம், நிலவளம், மலைவளம் முதலிய சகல வளங்களும் கொண்டு, பெரியாற்றுப்போக்கால் மிக்க வளப்பமாக்கப்பட்டு, கம்பம், பாளையம், சின்னமனூர் முதலிய பாவுகளால் சிலாக்கியமாக்கப்பட்டுக், கம்பம் பள்ளத்தாக்கால் அலங்கரிக்கப்பட்டு, வரிசை நாட்டு மலையால் சிறந்து விளங்கும் கண்டமநாயக்கனூர், மதுரைஜில்லாவிற்கே மேற்கு வாசலாக விளங்கும் போடிநாயக்கனூர், அளவில் சிறியதாயிருப்பினும், ஆற்றலில் அதிகமாயிருக்கும் தேவாரம், இன்னும் எரசக்கநாயக்கனூர் முதலியசிறந்த செழிப்பான, கௌரவமான ஜமீன்களால் சிறந்து பெயர் பெற்று விளங்கும் இத்தாலுகா, பெரியாறு, சுருளி நதி, வள்ளல்நதி, தேனியாறு, பெரியகுளத்தாறு, மஞ்சள் நதி முதலிய ஆறுகளால் அழகாக்கப்பட்டிருக்கும் இத்தாலுகா, தேனி, சின்னமனூர், போடிநாயக்கனூர் முதலிய வியாபார ஸ்தலங்களினால் பேர் பெற்றிருக்கும் இத்தாலுகா, மைசூர்ச் சண்டைச் சரித்திரத்தில் சம்பந்தப்பட்ட கோம்பை, பாண்டிய அரசர் சரித்திரத்தொடர்புள்ள வீரபாண்டி, விஜயநகர அரசர் வீர, தீர, கம்பீர கிருஷ்ணதேவராயர் வழியோர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த

பெரியகுளம் முதலான புராதன ஊர்களை உடையதாயிருக்கும் இத்தாலுகா, அநேக அழகான, அருமையான நற் கிராமங்களால் ஆக்கப்பட்டிருக்கும் இத்தாலுகா, ஆஸ்திக்காரர்கள் குறைந்திருப்பினும அறிவாளிகள் நிறைந்திருக்கும் இத்தாலுகா, அநேக பிரபுக்கள் இல்லாவிட்டாலும், கணக்கற்ற ஏழைகள் இல்லாதிருக்கும் இத்தாலுகா, மதுரை ஜில்லாவிற்கே கண்ணெனத்தகுந்த விதமாய் முதன்மைபெற்று விளங்கும் இத்தாலுகா புதிதாக இப்பொழுது உத்தமபாளையம் எனப் பெயர் பெற்று விளங்குகிறது.

தாலுகாக்கச்சேரி அதின் பரிவாரங்களுடன் பாளையம் வந்துவிட்டது. தபால் வண்டி, குதிரை வண்டி, மோட்டார் வண்டி முதலிய சாதனங்களில்லாத அக்காலத்தில் தாலுகாவின் ஓர் கோடியில் ஓர் ஊரில் தாலுகாக்கச்சேரியை ஏற்படுத்திக் கிராமத்தார்களைத் திண்டாடும்படி செய்த சர்க்கார் குடிகளுக்கும், தங்களுக்கும் உண்டாயிருக்கும் கஷ்டங்களை அனுபவித்து, அறிந்து, இப்பொழுது அவர்கள் தாலுகாக் கச்சேரியை உத்தமபாளையத்திற்குக் கொண்டுவந்து, உத்தமபாளையத்தின் பெயரால் இத்தாலுகாவை மாற்றியிருக்கிறார்கள்.

இத்தாலுகாவின் எப்பக்கங்களிலிருப்பவர்களுக்கும் கூடிய மட்டில் மத்தியமான இடம் உத்தமபாளையம். இத்தாலுகாவில் உத்தமபாளையம் பிற்காவே வளப்பங்களால் சிறந்தது; வரவால் (ரெவினியூ) உயர்ந்தது. இது தாலுகாவாக்கப் பெற்றிருப்பதால் பல கிராமத்தார்களுக்கும் ஒரு வகைச் சிறு தொந்திரவு ஒழிந்தது; ஒழிந்தது. புதிய பெயர் பெற்று விளங்கும் நம் தாலுகா பேரும், புகழும் பெற்று என்றும் விளங்கட்டும்.

இந்த உத்தமபாளையம் தாலுகாவிற்குத் தலைவராய்—தாசில்தாராய் வந்திருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ கனம் ஜான் அன்பு அவர்களை அன்புடன் ஆர்வத்துடன் ஆனந்தத்துடன் அழைக்கிறேன்; நல்



வரவேற்கிறேன். அகிலமெங்கும் அன்பை அடைய ஆவலுடன் ஆசிக்கிறார்கள். அன்பர் அன்பு அவர்கள் அவர்கள் கம் அன்பால், அறிவால், ஆற்றலால் தாலுகா வாசிகளை அன்பர்களாக்கட்டும். அன்பு அன்பை வளர்க்கட்டும். அன்பை அனைவரும் அறியட்டும்; அனுபவிக்கட்டும்; ஆனந்திக்கட்டும். அன்பு பொங்கிப் பொங்கிப் புரண்டு புரண்டு ஓடட்டும். அன்பின் மணம் தாலுகாவெங்கும் சதா மணக்கட்டும். அவனருளால் அவ்விதமே ஆகுக, ஆகுக.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

## உத்தமபாளையம் தாலுகா போர்டு.

லார்டு ரிப்பன் எங்களப்பன் என்று ஜனங்களால் புகழப்பட்ட லார்டு ரிப்பன் நற்றுரை மகனார் கவர்னர் ஜெனரலாயிருந்த காலத்தில் ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி இந்தியர்களுக்கு வழங்கப்பட்டது. அதை இது வரையில் சரியாய் முற்றிலும் அனுபவிக்க முடியவில்லை. அதற்குக் கணக்கற்ற காரணங்கள் உண்டு. ஜில்லா, தாலுகா போர்டுகளின் தலைமைகளை ஆதியில் அதிகார வர்க்கங்களே தாங்கி, அவைகளை அவர் தம் ஆதீனத்தில் அடக்கி ஆண்டு சுதந்தரத்தை நசுக்கிப் பெயரளவில் ஸ்தல சுயாட்சி என்று காட்டிக்கொண்டு வந்தார்கள். அக்காலத்திலிருந்து இன்றளவும் இப்போர்டுகள் என்ன, என்ன வேலைகள் எப்படி எப்படிச்

செய்திருக்கின்றன? என்று நமது நுண்ணறிவை உபயோகப்படுத்திக் துருவித் துருவிப்பார்த்தால், இந்தியாவிலே பிறந்து, இந்தியாவிலே வளர்ந்து, வாழ்ந்து, இந்தியாவிலேயே மரிக்கப் போகும் எந்த இந்தியனும் எவ்வளவு கல்நெஞ்சனாயிருந்த போதிலும் தேச நிலைமையைக் கண்டு வருந்தாமலிருக்கமாட்டானென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

உதாரணத்திற்காக நமது தாலுகா போர்டை எடுத்துக் கொள்வோம். நமது தாலுகா போர்டு ஏற்பட்டு எவ்வளவு காலமாயிற்று? என்ன என்ன வேலைகளைச் செய்திருக்கிறது? தாலுகா போர்டு என்ற நாமதேயம்கூட நுழைந்தறியாத எத்தனையோ கிராமங்களிருக்கின்றன. எத்தனையோ ஜனங்கள் தாலுகா போர்டின் வேலைகள் இன்னதென்றுகூட அறிய முடியாதபடி படிப்பின்மையால் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறார்கள். கவனிக்க! கவனிக்க!!

“அறியாமையே எல்லாப்பாதகங்களுக்கும் மூல காரணம்” என்றார் புத்தர்பிரான். இந்தியாவானது மறுபடியும் உயர்வு பெற்று விளங்கவேண்டுமேயானால், ஜனத்திரள்களெல்லாம் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று சொல்லித் தேச நிலைமையின் பரிதாபத்தைக் கண்டு அழுதார் பாரதமாதாவின் அருந்தவ உண்மை உத்தமப்புதல்வர் ஸ்வாமி விவேகானந்தர். பலப்பல பத்திரிகைகள் பல வருடங்களாகக் “கல்வி, கல்வி” என்று உருக்கத்துடன், பெருக்கத்துடன் எழுதியெழுதி அலுத்துவிட்டன. பல தேசாபிமானிகள் “பொதுஜனக்கல்வி, பொதுஜனக்கல்வி” என்று பலபல விடங்களில் பல தடவைகளில் பல வருஷங்களாகக் கதறிக் கதறிப் பேசி அலுத்துவிட்டார்கள். இன்னும் கட்டாய ஆரம்பக் கல்வி ஜனங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று ஜனங்களிடையில் கிளர்ச்சி செய்து, இந்திய சட்டசபையில் அறிஞர் கோபாலகிருஷ்ண கோகுலர் ஆக்கிரத்துடன் கொண்டுவந்த கட்டாய



ஆரம்பக்கல்வி மசோதா கண்மூடித்தனமாய் நிராகரிக்கப்பட்டது. அவர் கொண்டுவந்த மசோதா சட்டமாக்கப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டிருந்தால், நமது நாட்டில் கல்வி கல்லாதவரின் தொகை சிறிதாகவேயிருந்திருக்கும். ஐயோ! இந்நாள் வரைக்கும் கவனிக்கப்படவில்லையே, இது நாடா? காடா? நாம் மனிதர்களா? மிருகங்களா? என்று ஆட்சி புரிவோர் கவனிக்காமலிருக்கிறார்கள். 150 வருஷங்களுக்கு மேலாக நம்மை ஆண்டு கொண்டு நம்மைத் தரித்திரர்களாகச் செய்து பலஹீனர்களாக்கிப் படிப்பில்லாதவர்களாகப் பண்ணி அடிமையில் ஆழ்த்தி வைத்திருக்கும் எந்த அரசாங்கமாயினும் சரியே, அந்த அரசாங்கத்தை வெறுக்காமலிருக்கமுடியாது. அதன் அதர்மச் செய்கைக்காகக் கண்டிக்காமலிருக்கவும் முடியாது. அமெரிக்கர் ஆட்சியால் 30 வருடங்களுக்குள் முன்னேற்றம் அடைந்திருக்கும் பிலிப்பைன் தீவுகளை நோக்கி நாம் வெட்கப்படவேண்டியதிருக்கிறது. அங்கு பிரஜைகள் 100-க்கு 75 வீதம் கல்வி கற்றிருக்கிறார்கள். இந்தியாவில் சுதேச சமஸ்தானங்களில் ஒன்றாகிய திருவாங்கூரில் 100-க்கு 28 பேருக்குமேல் கற்றிருக்கிறார்கள். இதுவே இந்தியாவில் கல்வியில் தலைசிறந்து விளங்குகிறது. பரோடாவிலே 100-க்கு 21 பேர்கள் படித்திருக்கிறார்கள். பொது ஜனங்களின் வரிப்பணத்திலிருந்து கோடி கோடியாகப் பல பயனற்ற விஷயங்களில் வாரி இறைத்துக்கொண்டு வரும் அரசாங்கம் இந்தியாவில் 100-க்கு 6 பேர்களைக்கூட இன்னும் கல்வி கற்பிக்கவில்லையென்றால், இந்த ஆட்சிமுறையை என்னென்று சொல்வது! ஆங்கில ஆட்சிக்கே அவமானம்! அவமானம்!! ஐயகோ, ஒவ்வொரு தேசத்தாருடைய சராசரி வருட வருமானம் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கும் பொழுது, ஒவ்வொரு இந்தியனுடைய சராசரி வருட வருமானம் குறைந்து 7 பைசாவுக்கும் கீழாக வந்துகொண்டிருக்கிறதென்று இந்தியாவின் பொருளாதார நிபுணர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நமது புராதன தத்துவங்களையும், சாஸ்திரங்களையும், கலைகளையும், நாகரீகங்களையும் உலகத்தார் மதித்துக் கௌரவித்த போதிலும், தற்காலத்தில் நாம் மதிக்கப்படவில்லை. அடிமை வாழ்க்கைக்காகவும், கல்வியின்மைக்காகவும் மகா கேவலமாக வெறுக்கப்படும் ஜனங்களில் உலகில் நாமே, இப்பொழுது முதன்மை பெற்றிருக்கிறோம். சுதந்திரம் இன்றேல் எவை எவ்வளவு பெற்றும் என்னும்? ஆதலால் விரிவஞ்சி இவ்விஷயத்தை யிப்படியே இறுதியாக்கிவிட்டு, எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு வருகிறேன்.

1. மதுரை ஜில்லாவில் சில தாலுகாக்களுக்குத் தனித் தனித் தாலுகா போர்டு ஏற்பட்டிருக்கையில், அறிவில் ஆற்றலில் ஆஸ்தியில் அந்தஸ்தில் வளங்களில் வரவுகளில் முதன்மைபெற்று, எதற்கும்முன்னணியில் நிற்கும் நிற்கக்கூடிய இத்தாலுகாவிற்குத் தனிப்போர்டு ஏற்படுத்தாததின் காரணத்தைக் கண்டுகொள்ளமுடியவில்லை. ஆதியில் ஏதோ சில விஷயங்களை உத்தேசித்து இவ்வாறு செய்திருப்பினும், எப்பொழுதே இதற்குத் தனிப்போர்டு ஏற்பட்டிருக்கவேண்டும். இதில் தவறிவிட்டார்கள்.

உத்தியோகஸ்தரல்லாத பிரசிடெண்டு கிடைத்தும், இது விஷயம் இன்னும் கவனிக்கப்படவில்லை யென்று வருந்தாமலிருக்கமுடியவில்லை. ஒவ்வொரு தாலுகாவிற்கும் தக்க வசதிகள் செய்யமுடியாமல் தவறிக்கொண்டு வருகிறதும், தீர்மானித்த தீர்மானங்களை நிறைவேற்றமுடியாமல் திண்டாடிக் காலங் கடத்திக்கொண்டு வருவதுமாகிய இந்தத் தாலுகா போர்டாரைப் பற்றி இருதாலுகாக்களிலும் அதிருப்தியே வளர்ந்துகொண்டுவருகிறது.

கல்வி வசதி போதியபடி கிடையாது. எங்கோ சிலவிடங்களில் போர்டுப் பள்ளிக்கூடங்கள் காணப்படுகின்றன.

“கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்”. என்பது ஔவைப் பிராட்டியாரின் அமிர்த மொழி யெனினும், “பள்ளி



யில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்று காலத்திற்குத் தக்கபடி மாற்றவேண்டிய சீர்திருத்தகாலம் வெகு வேகமாய் ஓடிக்கொண்டுவருகிறது. “ஒரு ஸ்கூல் ஏற்படுத்தினால், ஒரு ஜெயில் அடைபடும்” என்றார் ஒரு ஆங்கில அறிஞர். எத்தனையோ கிராமத்தார்கள் பள்ளிக்கூடம், பள்ளிக்கூடம் என்று வேண்டுகிறார்கள், கெஞ்சுகிறார்கள். ஆயிரக்கணக்கான கையொப்பங்களிட்டு, விண்ணப்பத்திற்குமேல் விண்ணப்பம் அனுப்பியதற்குப் பதிலாக “கூடிய சீக்கிரத்தில் கவனிக்கப்படும்” என்ற முடிவற்ற, நம்பிக்கையற்ற பதில் கிடைப்பதுகூட அரிதாயிருக்கிறது. “எண்ணைச் செலவு ஒழிய, பிள்ளை வளர வழியில்லை” என்ற முதுமொழியானது நமது தாலுகா போர்டுக்குப் பொருத்தமோ? என்று தாலுகாவாசிகளைக் கேட்கிறேன்.

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பல பல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயினுக் கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.

என்ற தமிழ் உலகின் தேசியக் கவி அரசர் சுப்ரமண்ய பாரதியாரின் சீரிய, வீரிய மொழிகளை இக்கண்ணிய மிகும் தாலுகா போர்டு கவனிக்குமா? இன்னும் நமது தாலுகாவில் கணக்கற்ற கிராமங்களில் பள்ளிக்கூடங்களில்லாமலிருக்கின்றன. அவைகளுக்கு என்றுதான் விமோசனமோ? அரசாங்கத்தார் நம்மிடமேயிருந்து வரி வசூலித்துக்கொண்டு நமக்குக் கல்வி கொடுக்குமாறு கனம் மந்திரியிடம் கல்வி இலாகாவை ஒப்புவித்திருக்கிறார்கள். என் செய்வோம்!

வைத்திய வசதிகளைப்பற்றி என்ன சொல்லட்டும். பாலைவனத்தில் எங்கேனும் காணப்படும் நீர் ஊற்றுகள் போன்று, எங்கோ சில இடங்களில் வைத்திய சாலைகள் காணப்படுகின்றன. இவை போதுமா? காலரா, பிளேக் முதலிய பீதியான தொத்து வியாதிகள் பரவினால் என்ன உபாயங்கள், வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? பரிதாபம்; பரிதாபம்!, ரோட்டு வசதியோ சொல்லத் தேவையில்லை. பல கிராமங்களில் வாக்குறுதி கொடுத்துப் பணங்களைப் பெற்றுக்கொண்டுங்கூட போர்டார் கவனியாதிருக்கும் பொழுது, இனிமேலும் எப்படி அதிகமான இடங்களில் புதிதாக ரோட்டுகள் திறக்கமுடியும்?

ஒரு தாலுகா மெம்பர் அடுத்த தாலுகாவைக் கவனிக்க முடியுமா? கவனிக்க இஷ்டப்படுவாரா? ஒரு தாலுகாவின் பணத்தை மற்றொரு தாலுகாவிற்கு அதிகமாகச் செலவு செய்வதற்குச் சம்மதப்படுவாரா! தன் தாலுகாவைக் காட்டிலும் மற்றொரு தாலுகாவிற்கு அதிக வசதிகள் செய்து கொடுக்கச் சம்மதத்துடன் சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டிருப்பாரா? மற்றொரு அடுத்த தாலுகாவின் நிலைமையை உள்ளபடி அறிவாரா? அநேக தீர்மானங்களை நிறைவேற்றிக் காகிதத்தில் காட்டுகிறார்களேயன்றி, காரியத்தில் இத்தாலுகா போர்டார் அதிகமாகக் காட்டுவதில்லையென்று பலர் சொல்லுகிறார்கள். சுருங்கச் சொன்னால் இத்தாலுகாவில் கல்வி, வைத்தியம், சுகாதாரம், ரோட்டு முதலிய வசதிகள் போதிய அளவு கிடையாதென்று திட்டமாகச் சொல்லலாம்.

பெருமை பொருந்திய இத்தாலுகாபோர்டின் கௌரவமிக்க தலைவர் அவர்களே! பொது ஜனங்கள் வேண்டாதிருக்கும் பொழுது, இரண்டு பெரிய தாலுகாக்களை ஒன்றாய்ச் சேர்த்து, இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? என்று இத்தாலுகா வாசிகள் வருந்துகிறார்கள். ஓரிடத்திற் செலுத்த வேண்டிய கவனத்தை இரு இடங்களிற் செலுத்தினால், செலுத்



தும் சக்தி பிரிந்து, பலமற்றுப்போகுமல்லவா? அப்படிச் செலுத்துவது சற்றுச் சாத்தியமானாலும், குறித்த காரியங்கள் எல்லாம் குறித்த காலத்தில் செவ்வனே நடைபெறுமென்று எண்ணுகிறீர்களா? தாலுகாக்கள் இரண்டாயிருப்பதாலும், வேலைகள் பலவாயிருப்பதாலும், வேலைக் கெடுதிகளும், வீண் செலவுகளும், வீண் அலைச்சல்களும் அதிகமாக உண்டாகுமென்று நினைக்கக் கூடாததற்குத் தகுந்த காரணங்கள் உண்டா? சொல்வீர்களா? இவ்வாறு இரண்டு தாலுகாக்களையும் கட்டாயமாகக் கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பதால், எவருக்காவது பயன் உண்டா? பின் ஏன் தாங்கள் இவ்வாறு செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று காரணங்கள் கேட்டால் சொல்வீர்களா?

தங்களுக்கு ஆற்றல் இருக்கிறது; அனுபவம் இருக்கிறது; அந்தஸ்து இருக்கிறது; அதிகாரம் இருக்கிறது. தங்களுக்கு இதைப்பற்றி எவரும் சொல்லத் தேவையில்லை. காலச்சக்கரம் வேகமாய்ச் சுற்றிக்கொண்டிருக்கிறது. உலகத்தின் நிலை அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிறது. இயற்கையின் சக்தி அபாரமானது, மகாவேகமுள்ளது. ஆனால் அது காலத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கும். சுதந்தரம் என்ற சப்தமே எங்கும் பெருகித் தொனித்துக் கொண்டிருக்கிறது. நம் நாட்டிலும் அது முழங்காமலில்லை. சுதந்தர உணர்ச்சி தோன்றிய இக்காலத்தில் சுதந்தரத்தை அடக்க எண்ணுவது ஆகாத காரியமாகும். ஒருவரை ஒருவர் அடக்கி ஆளவேண்டுமென்ற இழிகுணம் உலகத்தில் இருக்கும் வரை இம் முழக்கம் இருந்தே தீரும். "எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு" என்றார் பாரதியாரும்.

ஜனநாயகம் ஓங்கவேண்டுமென்று உலகத்தார் சகலருமே வேலை செய்து கொண்டிருக்கும் இப்பொழுது, ஸ்தல சுயாட்சியை நம் தாலுகா வாசிகளுக்குப் போதிக்கவேண்டியது தலைவர்களாகிய தங்கள் கடமையாயிருக்கும் பொழுது, மெம்பர்களில்

சிலர் தனித் தனித் தாலுகாப் போர்டு வேண்டுமென்று விரும்பும் பொழுது, போர்டின் காரியங்களை யெல்லாம் காலா காலத்தில் செவ்வனே செய்து முடிக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது, தாலுகா வாசிகளே பல வித சௌகர்யங்களை உத்தேசித்துத் தாலுகாப் போர்டை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று முயற்சிகளும் கிளர்ச்சிகளும் செய்துகொண்டிருக்கும் பொழுது, போர்டுப் பிரிவினை விஷயமாகத் துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்துகொண்டிருக்கும் பொழுது தாங்கள் இரண்டு போர்டுகளையும் ஒன்றாகச் சிரமத்துடன் இணைத்து வைத்துக்கொண்டு கஷ்டப்படுவது நியாயமா என்று தங்களைத் தாங்களே தயவுசெய்து கேளுங்கள். "உடனே பிரித்து விடுங்கள், உடனே பிரித்துவிடுங்கள்" என்று உங்கள் மனச்சாட்சி பதில் சொல்லும். தாங்கள் தயவு செய்து பொது ஜன உணர்ச்சியை மதியுங்கள். மதித்து, போர்டை இரண்டாகப் பிரித்து, ஒவ்வொரு தாலுகாவிற்கும் தனித் தனியே போர்டு ஏற்படுத்திக் கொடுத்தால், ஜனங்களுடைய புகழ்ச்சி கிடைப்பதுடன், "இன்னார் பொது ஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி, இப்படிச் செய்தார், என்ற நற்பெயரும் தங்களுக்குக் கிடைக்கும். தயவு செய்து கவனியுங்கள்; காரியத்தைச் செய்யுங்கள்.

பெருமை தங்கிய தாலுகாப் போர்டின் கௌரவம் வாய்ந்த அங்கத்தினர்களே! அநேக ஆயிரக்கணக்கான ஜனங்களின் பிரதிநிதிகளாகத் தாங்கள் இந்தப் போர்டில் அங்கம் வகிக்கின்றீர்கள். தங்களுடைய பாலத்தொண்டு ஏதேனும் இருக்குமாகில் தாலுகா வாசிகள் நன்கு பாராட்டாமலிருக்கமாட்டார்கள். உங்களை இந்தத் தாலுகாப்போர்டிற்கு அனுப்பிய ஜனங்களுடைய வேண்டுகோளை அறிகிறீர்களா? அவர்களுடைய உணர்ச்சிகளை மதிக்கிறீர்களா? தாலுகாவாசிகளின் விருப்பத்திற்கிணங்கித் தேசபக்தர் பணப்புரம் அன்பர் ஸ்ரீமான் T. B. கிருஷ்ணஸ்வாமி கவண்டரவர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திற்குத் தாங்கள் ஜனங்களுக்கு எவ்விதம் என்ன பதில் சொன்னீர்கள்; இன்னும் என்ன சொல்லப் போகின்றீர்கள்? உத்தமபாளையம் தாலுகா தேசிய சபைக் காரியதரிசி அறிஞர் ஜனாப் இப்ராகிம் கொந்தால் கான் முகம்மது ராவுத்தர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் போர்டுப் பிரிவினைப்பிரேரேபணையைத் தாங்கள் சிறிதும் ஆதரியாதுவிட்டீர்களென்பதை அறிந்து பொது ஜனங்கள் முழுமனதுடன் வெறுக்கிறார்கள். ஜனசமூகம் இம்மாதிரிப் போக்கைக் கவனித்துக் கண்டிக்கும் காலம் வந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது ஸ்ரீமான் T. B. கிருஷ்ணசாமி கவண்டரவர்கள் கொண்டுவந்திருக்கும் போர்டுப் பிரிவினைப் பிரேரேபணையைத் தவறாது அனைவரும் ஆதரித்து, உங்கள் கடமையைச் செய்து முடித்து, நல்ல பெயர் வாங்குங்கள். இதில் தவறி விட்டால் பழிப்புக்கு இடமாகி விடுவீர்களென்பது திண்ணம். தாங்கள் எதற்காகத் தாலுகாப் போர்டிற்குச் சென்றீர்களோ, அதனை மட்டும் செய்தால் போதுமானது. தயவு செய்து அதிகமாகச் செய்துவிட வேண்டாம். சேர்த்துச் செய்யும் வேலைகள் பல, பிரித்துச்செய்யும் வேலைகள் பலஇருக்கின்றன. எதையும் ஆலோசித்தே செய்யவேண்டும்.



உத்தமபாளையம் தாலுகா வாசிகளின் மேன்மைமிக்க பிரதிநிதிகளே, உங்களுடைய தாலுகா வாசிகளின் விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றி விட்டீர்களா?

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்  
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்  
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்  
ஆலயம் பதி னாயிர நாட்டல்  
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்  
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்  
அன்ன யாவினும் புண்ணியங் கோடி  
ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்,

என்ற தேசியக் கவியின் ஆவேச அமிர்த மொழிகளைக் கவனித்துப் பள்ளிகளை எல்லாக் கிராமங்களிலும் வைக்க ஏற்ற ஏற்பாடுகள் செய்யுங்கள். இரண்டு தாலுகாக்களிலும் 24 பிரதிநிதிகள் சேர்ந்து, உட்கார்ந்து கூடிப்பேசி, வாதித்துத் தீர்மானங்களைக் காகிதத்தில் எழுதி வைத்து விட்டுப் போக இஷ்டமா? அல்லது நம்து தாலுகாவின் பிரதிநிதிகளாக 12 பேர்கள்கூடி, தாலுகாவாசிகளின் அவசிய, அவசர வேண்டுகோளை அறிந்து தீர்மானங்கள் நிறைவேற்றிக் காரியக்காரர்களாக விளங்க இஷ்டமா? பொது ஜனங்களுக்கு ஊழியம் செய்யாது அவர்களிடமிருந்து கௌரவத்தை மட்டும் எதிர்பார்ப்பது நியாயமா? உங்கள் பால் அவர்கள் கொண்டிருக்கும் அன்பை உங்கள் உழைப்பால் வளர்க்க வேண்டாமா? தலைவர், தலைவர் என்று உங்களை நம்பிக் கொண்டிருக்கும் தாலுகா வாசிகளைத் திருப்தி செய்வது உங்கள் கடமையல்லவா? பொதுஜன அபிவிர்த்திக்கு விரோதமாகப் போவது உங்களுடைய அபிவிருத்திக்குத் தடையாகுமல்லவா? தாலுகா வாசிகள் தங்களுக்கெனத் தனியாகத்தாலுகாப் போர்டு வேண்டுகிறார்கள், அவர்களிஷ்டப்படி செய்து கொடுக்கத் தீவிரமாக முன் வாருங்கள். காலம் உங்களை அழைக்கிறது. தயவு செய்து செவி கொடுத்துக் காரியத்தைச் செய்யுங்கள்.

கிராமப் போர்டுக்கும் ஜில்லாப் போர்டுக்கும் மத்தியிலிருக்கும் தாலுகாப்போர்டை எடுத்துவிட்டு, கிராமப்போர்டுக்கும் ஜில்லாப்போர்டுக்கும் நேரான சம்பந்தம் வைத்துக் கொள்ளவேண்டுமென்று மந்திரி சபையில் பேச்சு நடந்து கொண்டிருப்பதாக வதந்தி ஒன்று பரவிக்கொண்டு வருகிறது. இவ்விஷயம் ஒரு முடிவுக்கு வருவதற்குள் நீங்கள் இக்காரியத்தில் முந்திக்கொண்டால் நல்லதல்லவா?

உத்தமபாளையம் தாலுகாவிலுள்ள யூனியன் போர்டின் அங்கத்தினர்களே, உங்கள் உயரிய கடமையைச் செய்யவேண்டியகாலம் வந்துசேர்ந்திருக்கிறது. தலைவர்கள் தூங்குகிறார்கள்.



அவர்களைத் தட்டித்தட்டி எழுப்புங்கள். பெரியவர்கள் செய்வார்கள் என்று ஏமாந்து போகாதீர்கள். யூனியன் போர்டுகளெல்லாம் அதனதன் கடமைகளைச் செய்துவிட்டுத் தாலுகாப்போர்டை இனிச் செய்யாமல் முடியாது என்ற நிலைமைக்குக் கொண்டுவந்து விடுங்கள்.

அன்பு மிக்க தாலுகாவாசிகளே! நீங்கள் விரும்பியவைகளையெல்லாம் கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டீர்கள். உங்கள் வேண்டுகோள்கள் தக்கவாறு கவனிக்கப்படவில்லை. காரணம்? நமது கௌரவ மெம்பர்களின் போதிய கவனமின்மையே. உங்கள் தாலுகாவிற்கென ஒரு போர்டை ஏற்படுத்துவதில் தீவிரமாக வேலை செய்யுங்கள். உங்கள் தாலுகா வாசிகளையே அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுத்து அனுப்புங்கள். உங்கள் நன்மைகளுக்காக அவர்கள் வேலை செய்யட்டும். உங்கள் தாலுகாப் போர்டு உங்கள் நன்மைகளுக்காக உங்கள் பிரதிநிதிகளால் ஆளப்படட்டும். அதற்கான முயற்சிகளும், கிளர்ச்சிகளும் செய்யத் தீவிரமாக முன்வரல் வேண்டும். உத்தமபாளையம் தாலுகாப் போர்டு ஏற்படுத்துவது உங்களுக்குள் தானிருக்கிறது. ஜனநாயக உணர்ச்சிகளை வெளியே காட்டித் தான்தோன்றிகளை, தன்னரசு செலுத்துபவர்களைக் கீழே தள்ளி அவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்து, ஸ்தல சுய ஆட்சியை அனுபவியுங்கள். நீங்கள் பொது நன்மைகளை நாடி அவைகளை விரும்புகிறபடியால், கௌரவ மெம்பர்கள் கவனிக்கக்கூடும். கவனிக்காவிட்டால், நீங்கள் அவர்களைக் கவனித்துக்கொள்ளுங்கள். கிளர்ச்சியின் பயனாக எல்லாத் தேசங்களிலும் வேண்டிய நன்மைகளை அடைந்திருக்கிறார்களானதால் நீங்களும் அவ்வாறே செய்யுங்கள். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் உலகமெங்கும் பரவிப் பெருகட்டும்.

பிரத்தியேகமான வேண்டுகோள்:— தாலுகாப் போர்டின் மூலம் ஏலவிவசாயிகள் அடைய வேண்டிய அனுகூலங்கள் அநேகமிருக்கின்றனவாகையால்; ஏலத்தோட்டக்காரர்களிலிருந்து உசி

லம் பட்டித்தாலுகாப் போர்டில் இப்பொழுது அங்கம் வகிக்கும் ஸ்ரீமான்கள் போடி நாயக்கனூர் அ. சுப்பையன் செட்டியார் அவர்கள், காமய நகர் நா. கா. கிருஷ்ணஸ்வாமி கவுண்டரவர்கள், கம்பம் N. K. P. P. ராவுத்தரவர்கள், உத்தமபாளையம் இப்ராஹிம் கொந்தால் கான் முகம்மது ராவுத்தரவர்கள், பணைப்புரம் T. B. கிருஷ்ணஸ்வாமி கவுண்டரவர்கள் ஆகிய இக்கனவான்களை இப்பொழுதிருக்கும் நமது கூட்டுத் தாலுகாப் போர்டைப் பிரிக்கும் விஷயத்தில் தளரா உற்சாகத்துடனும், குன்றா விடா முயற்சியுடனும், அசையா உறுதியுடனும் எல்லா வழிகளிலும் தக்கபடி வேலைகள் செய்து, தனித் தாலுகாப் போர்டு ஏற்படுத்த முன்வரும்படியாக மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். இப்பெருமுயற்சியில் இந்த ஐந்து கௌரவமிக்க அங்கத்தினர்களும் உண்மையுடன் ஒன்று சேர்ந்து, நன்கு உழைக்கும்படியாக மறுபடியும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

---

## ஏல விவசாயிகளுக்கு ஏற்ற தொண்டு.

தொண்டு என்பது அபாரமான, அருமையான, அன்பான, அரிய ஒரு விஷயமாகையால், தொண்டின் பெருமையைப் பற்றித் தனிக் கட்டுரை யொன்று எழுத எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஏல விவசாயிகள் இப்பொழுது அவஸியமாகவும், அவசரமாகவும்



செய்ய வேண்டும் வேலைகள் சில இருககின்றன. "தன் சகோதர ஜனங்களுக்கு உழைத்தால்தான் அவன் தன் ஜீவியத்தில் உண்மையான திருப்தியடைவதோடு, அவன் வாழ்க்கையும் சிறப்புற்றதாகின்றது" என்று கூறுகிறார் ராபர்ட் ஓவன் துரையவர்கள். கானகத்தில் தன்னந் தனிய பூத்து வாடி, வதங்கி, உதிர்ந்து, உலர்ந்து, அழிந்து மண்ணோடு மண்ணாய்ச் சேர்ந்து போகின்ற மணமிக்க நறுமலர்களுக்கு ஒப்பாக இருக்கின்றன பரோபகாரமின்றி வீணே செல்கின்ற நமது வாழ்நாட்கள். நமது உடலின் அவயவங்களைக் கவனித்துப் பாருங்கள். வேலைசெய்வதற்காகவே நாம் உடலோடு கூடிப்பிறந்திருக்கிறோம், வேலை செய்வதற்காகவே நாம் உடலோடுகூடி வாழ்கிறோம். பரஸ்பர சகாயத்தின் மூலமாகத்தான் மனித சமூகம் வாழ்கின்றது. ஒத்துழைப்பு இல்லாவிடில் உலக நிலை என்னாகுமென்று விவரிக்கத் தேவையில்லை. "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றார் தமிழ்நாட்டின் ஒப்பற்ற வனிதா ரத்னமாகும் கல்விச் செல்வியார் ஔவை.

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே"

என்றருளினார் சமரச ஞானி தாயுமானார். "மானிட சேவையே மகா சேவை" என்கிறார்கள் தேசபக்த சிரோன் மணிகள். ஊழியம், தியாகம், அன்பு ஆகிய இம்மூன்று முக்கிய உபதேசங்களையே நமது மாதுரு பூமியாம் இந்தியா உலகத்திற்குப் போதித்திருக்கிறது. நமது வேதங்கள், உபநிடதங்கள், எல்லாமதங்களின் உயர் நூல்கள் எல்லாம் ஊழியம் ஊழியம் என்றல்லவா கோஷிக்கின்றன. இயற்கை வஸ்துக்களும் இதையே போதிக்கின்றன. இதைப்பற்றி எழுதினால் விரிவாகும்.

நமது கௌரவமிக்க தலைவர்களில் சிலருடைய, உழைப்பால், தியாகத்தால்தான் நமது இன்றைய சங்கம் இவ்வித நிலை

மையிலாவது இருக்கிறது. இது இப்படி இருக்கட்டும். ஏல விவசாயிகள் எல்லோரையும் தன்னலத்தை முற்றிலும் வெறுத்துப், பொது நலத்திற்காக அவ்வளவு அதிகமாக உழைக்க முன்வரும்படியாகச் சொல்லவில்லை. உங்களுக்காகவும், உங்கள் சந்ததியர்களுக்காகவும் உழைக்கவேண்டுகிறேன். நீங்கள் கைக்கொள்ளப் போகும் சுயநலத்தோடு கூடிய பரநலத் தொண்டு உங்களுள் செல்வம் பெருகச் செய்யும்; ஊக்கம் உண்டாகச் செய்யும், உற்சாகம் வளரச் செய்யும்; ஐக்கியம் பரவச் செய்யும்; சமாதானம் நிலவச் செய்யும். இன்பம் ஜெனிக்கச் செய்யும்.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் இல்லாவிடில் நமது நிலைமை என்னாகும் என்று சற்று யோசித்துப் பாருங்கள். இச்சங்கத்தை எப்பொழுதும் அபிவிருத்தி செய்துகொண்டிருப்பது ஏல விவசாயிகள் அனைவருடைய கடமையாயிருக்கிறது. சங்கத்தின் குறைகள் என்ன என்று ஆராய்ச்சி செய்து, அவைகளை நீக்க வழிகள் தேடவேண்டியது அவசியமாகும். சில சில்லரையான, அற்பவிஷயங்களை முன்னிட்டுச் சில கிளைச் சங்கங்களில் உள். வேற்றுமை உண்டாகிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கவனியுங்கள்! தயவு செய்து கவனியுங்கள்!! தேவாரம் கிளைச்சங்கத்திலிருந்து சில கிராமத்தவர்களும், சில ஜாதியினர்களும் பிரிந்து தனித் தனியே கிளைச்சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள். தலைமைச் சங்கத்தின் கிளைகள் இவைகள் என்று ஏமாறுதீர்கள். இதைப்பற்றி பரிசீலனை செய்து வேண்டிய உள் தலைவர்களை அழைத்துத், தக்க விதமாகச் சொல்லி, ஒற்றுமையின் பலத்தை நன்கு விளக்கிக் காட்டி, அவர்களை ஆதரவால், அன்பால் உங்கள்பால் இழுத்து, எல்லோரையும் ஒன்று கூட்டி, வேண்டிய வேலைகளை யெல்லாம் செய்து, இன்னும் நம் சங்கத்தை வலுவடையும்படி செய்யுமாறு தலைவர்களையும் செல்வாக்கினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். நமது சங்கத்தின் ஒற்றுமையால்தான் நாம் அதிகமான நன்மைகள்



அடையவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நமது திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கத்தின் கட்டுப்பாட்டால் மட்டும் நாம் அடையவேண்டிய நன்மைகள் முற்றிலும் அடைந்து விடமுடியாது. ஒரு காகம் எங்கேனும் தின்பண்டங்களையோ, வேறு இரைகளையோ ஏராளமாக இருக்கக் கண்டவுடன் "கா, கா" என்று கத்தி தன் இனத்தை அழைத்து எல்லாம் கூடி அவைகளைத் தின்று ஆனந்தம் அடைவதைத் தினந்தோறும் கண்ணாரக்காணும் மானிடர்களுக்கு, பிராணிவர்க்கத்தில் உயர்ந்த அம்சமாகிய மனிதர்களுக்கு இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. "சேர வாரும் ஜெகத்தீரே" என்றார் தவராஜ சிங்கமாம் சிவ ஞானச் செல்வர் தாயுமானவர். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையமெல்லாம்" என்றார் விஸ்வபிரேமையென்னும் வையமளாவிய அன்பில் மூழ்கிய அடியார் ஒருவர். ஆகையால் மனித உருவம் தாங்கிய ஒவ்வொருவரும், அதிகமாக இல்லாவிட்டாலும், தத் தம் சக்திக்கேற்றவாறு பரோபகாரத்தொண்டு செய்யவேண்டும் என்று கூறத்தேவையில்லை. பரோபகாரம் செய்யும் பொழுது மானிடத் தன்மையிலிருந்து, தெய்வத் தன்மையை யடைகிறான். "நீ மனிதர்களை எவ்வளவு தூரம் நேசிக்கிறாய் என்று சொல்; நீ எவ்வளவு தூரம் கடவுளிடம் சென்றிருக்கிறாய் என்று சொல்கிறேன்" என்று சொல்லுகிறார் அமெரிக்காவின் மனோ தத்துவ சாஸ்திரியார் ஒருவர். பரோபகாரத்தொண்டில் ஈடுபட்டு ஒருவன் தன்னை மறக்கும் பொழுது, தலைவனை அறிகிறான். "தன்னை அறிந்தவன் தலைவனை அறிகிறான்" என்பது அறிஞரின் அருள்மொழி. கடவுள் அம்சமாகிய மனிதர்களைக் கண்ணால் கண்டு நேசிக்காதவனா, காணமுடியாத கடவுளை நேசிக்கப் போகிறான்? அவன் மானிட உருவத்தில் அவனைக்காணாவிடில், அவனை அங்கும், எங்கும் காணமுடியாது.

மதுரை ஜில்லாவில் பட்டி வீரன்பட்டி, தாண்டிக்குடி, பண்ணைக்காடு, அகமலை, சிறுமலை, கொடைக்கானல், கண்டமனாயக்

னூர் ஜமீன், எரசக்கநாயக்கனூர் ஜமீன், திருநெல்வேலி ஜில்லாவில் குற்றாலத்தின் சில பாகங்கள், சிவகிரிக் கடுத்துள்ள மலைகள் சேலம் ஜில்லாவில் ஏற்காடு மலைப்பிராந்தியங்கள், கோவை ஜில்லாவில் ஆனைமலைப் பிராந்தியங்கள், நீலகிரி ஜில்லா, மலையாளம் ஜில்லாவில் வயல் நாட்டு மலைப் பிராந்தியங்கள் ஆகிய இடங்களிலும், இன்னும் அநேக இடங்களிலுமுள்ள ஏல விவசாயிகள் அனைவரையும் ஒன்றுகூட்ட முயற்சிகள் செய்யவேண்டும்; ஏற்ற வழிகள் தேடவேண்டும். ஆதி காலத்தில் மத போதகர்களை அயலிடங்களுக்குப் போதிக்க அனுப்பியதுபோல, தகுந்த பிரசாரகர்களை அநேக இடங்களுக்கு அனுப்பி வேலைகள் செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந்த இராஜதானியிலுள்ள எல்லா ஏலக்கிருஷிகர்களையும் ஒன்றாய் இணைத்து வேலை செய்யும் நாள் என்றோ, அன்றே நம் சங்கத்திற்குப் புதிய சகாப்தம் பிறக்கும் நாள்; அன்றே நம் சங்கம் உச்சம் அடையும் உன்னதநாள். கனவிலேயும் காணாத இவ்விஷயத்தை நனவிலேயே காணும் பாக்கியத்தைச் சஞ்சீவியெனத் தரும் நமது சங்கத்தின் மூலம் நாம் அடையப் போகிறோம் என்று பெருமையுடன் சந்தோஷம் கொள்ளுங்கள்.

தமிழ் நாட்டிலே பாண்டியமண்டலத்திலே உள்ள சகல ஏல விவசாயிகளையும் முதலில் ஐக்கியப்படுத்தச் சகல வழிகளிலும் சகலவேலைகளையும் செய்யுமாறு நமது அரும் பெரும் தலைவர்களை வணக்கத்துடன் வேண்டுகிறேன். கண்ணிய மிக்க தலைவர்களே, வேலைகள் செய்வதற்கு ஆட்கள் இல்லை என்று நினைத்து, வருந்தாதீர்கள். தொண்டு செய்ய வேண்டுமென்று உயரிய நோக்கத்துடன் காலத்திற்காகவும் சந்தர்ப்பத்திற்காகவும் காத்துக்கொண்டிருக்கும், கூடிய மட்டில் சுயநலப்பற்றற்ற எத்தனையோ யௌவனர்கள் தயாராக இருக்கின்றார்கள். நீங்கள் கட்டளையிடும் வேலைகளைக் கைகளால் செய்ய எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் எத்தனையோ உத்தம வாலிபர்கள் தங்கள் மேலான



உத்திரவுகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களின் அன்பான, கருணையான கடைக்கண்பார்வை அவ்விளைஞர்கள் மேல் செல்லட்டும். ஏலவிவசாய உலகத்தின் பல பக்கங்களுக்கு ஒற்றுமையென்னும் சுவிசேஷத்தை இவர்களிடம் கொடுத்தனுப்புங்கள். பணம் தேவையா? செலவிற்கு வேண்டிய பணம் சங்கத்தில் இருக்கிறது. ஆள் உண்டு; ஆஸ்தி உண்டு. பின் இன்னமும் என்ன வேண்டும்? ஊக்கம் வேண்டும்; உற்சாகம் வேண்டும்; உழைப்பு வேண்டும்; உறுதிவேண்டும். போடிநாயக்கனூரில் கூடப்போகும் தலைமைச் சங்கப் பொதுக்கூட்டத்தில் இவ்வேலையைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவந்து, நிறைவேற்றுங்கள். பின் தளரா ஊக்கத்துடன் ஆத்திரத்துடன் காரியத்தைச் செய்யத் தொடங்குங்கள் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. இந்தப் பொன் போன்ற சந்தர்ப்பத்தை இழந்து "விடாதேயுங்கள். இப்பொழுது ஏன் கூடாது, ஏன் நாளைக்கு" என்னும் வெப்ஸ்டரின் அமிர்த மொழிகளைக் கவனியுங்கள்! கருத்துடன் கவனியுங்கள்!! கவனித்துக் காரியத்தைச் செய்யுங்கள் !!!

எடுத்துக்கொண்ட விஷயத்திற்குச் சம்பந்தமில்லாத ஒரு விஷயத்தைப்பற்றி அவசியம் இப்பொழுது இங்கு எழுதத்தான் வேண்டியிருக்கிறது. "ஏலவிவசாயி" பலவிடங்களுக்குப் பல வழிகளைத் திறந்திருக்கிறான். அற்பகாலத்தில் அநேகவேலைகளைச் செய்திருக்கிறான். ஏலக்கிருஷிகளிடையில் புதியதொரு ஊக்கத்தை உண்டாக்கியிருக்கிறான். "ஏலவிவசாயி" ஆறுமாதம் அடையாத, பால்மணம் அறாத பச்சைப்பசுங்குழந்தையாயிருப்பினும், அவன் செய்திருக்கும் வேலைகளோ அனந்தம்; அனந்தம். இவனை அவசியம் அநேக அன்பர்கள்கூடி அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று, போடி நாயக்கனூரில் சமீபத்தில் நடைபெறப்போகும் பொதுக்கூட்டத்தில்; தீர்மானம் கொண்டு வரும் பொழுது, அருமைமிக்க அங்கத்தினர்கள் அனைவரும் அதை அதிகமாக ஆதரித்து "ஏலவிவசாயி" என்னும் இளங்

குழந்தைக்கு ஆக்கத்தை அளிக்கவேண்டுமாய்த் தங்கள் அனைவரையும் பணிவுடன், அன்புடன், நம்பிக்கையுடன் கேட்டுக் கொள்கிறேன். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

---



## ஏலக்காய் ஏற்றுமதி
(இந்தியாவிலிருந்து)

| R. நெ. | எந்தத் தேசங்களுக்கு. | 1921-22 | 1922-23 | 1923-24 | 1924-25 | 1925-26 |
|---|---|---|---|---|---|---|
| | | எத்தனை அந்தர்கள். | | | | |
| 1 | பிரிட்டன் | 776 | 1,056 | 2,693 | 1,931 | 1,289 |
| 2 | பாலஸ்தீனம் | | | 1 | 1 | 5 |
| 3 | ஏடனும் அதைச்சார்ந்தவைகளும் | 953 | 494 | 333 | 200 | 248 |
| 4 | மெஸபொடேமியா (ஈராக்) | 212 | 220 | 116 | 47 | 110 |
| 5 | பாரெயின் தீவுகள் | 409 | 369 | 432 | 425 | 284 |
| 6 | இலங்கை (சிலோன்) | 4 | | 94 | 6 | 7 |
| 7 | ஸ்ட்ரெயிட் செட்டில்மெண்ட் | 559 | 132 | 199 | 139 | 171 |
| 8 | எகிப்து † | 409 | 59 | | | |
| 9 | நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) | | 2 | 3 | 1 | 4 |
| 10 | நேடால் | 43 | 32 | 49 | 53 | 46 |
| 11 | ஜான்ஜிபாரும் பெம்பாவும் | 45 | 45 | 59 | 38 | 30 |
| 12 | கென்யா | 58 | 44 | 42 | 24 | 33 |
| 13 | டன்கனிகா | 8 | | 3 | 4 | 4 |
| 14 | சோமாலிலாண்டு | 14 | | | | |
| 15 | ஆங்கில எகிப்திய சூடான் | 257 | 157 | 186 | 38 | 31 |
| 16 | மோரிஸஸ் | 43 | 31 | 20 | 21 | 14 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | பிரிட்டிஷ் கயானா | | | 2 | 2 | 5 |
| 18 | பீஜித்தீவுகள் | 9 | 10 | 8 | 4 | 4 |
| 19 | பிரிட்டிஷாருக்குச் சொந்தமான மற்ற இடங்கள் | 5 | | 1 | 5 | 10 |
| | பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் மொத்தம். | 3,804 | 2,651 | 4,241 | 2,939 | 2,295 |
| 20 | பின் லாண்டு | | | | | 12 |
| 21 | ஸ்வீடன் | | | 115 | 122 | 408 |
| 22 | நார்வே | | | 44 | 32 | 52 |
| 23 | டென்மார்க் | | | 229 | 153 | 103 |
| 24 | ஜெர்மனி | | | 437 | 295 | 430 |
| 25 | நெதர் லாண்டுகள் | | | 39 | 60 | 20 |
| 26 | பெல்ஜியம் | 34 | | 25 | 11 | 15 |
| 27 | பிரான்ஸ் | | | | | 47 |
| 28 | ஸ்பெயின் | | | | 32 | 74 |
| 29 | இடலி | | | | 9 | |
| 30 | ஆசிய துருக்கி | 10 | | | | |
| 31 | சிரியா | 72 | 59 | 115 | 103 | 77 |
| 32 | ஆர்மேனியா | | 17 | | | |
| 33 | மாஸ்கட்டும் துருஸல் ஓமானும் | 199 | 146 | 116 | 75 | 68 |
| 34 | அரபியாவிலுள்ள இதர சுதேச சமஸ்தானங்கள் | 517 | 217 | 135 | 152 | 113 |
| 35 | பெர்ஸியா | 342 | 101 | 179 | 138 | 298 |
| 36 | ஜாவா | 6 | 5 | 2 | 16 | 3 |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 37 | ஸயாம் | | | | 46 | 2 |
| 38 | ஜப்பான் | 83 | | 4 | 14 | 1 |
| 39 | எகிப்து † | | | 221 | 76 | 63 |
| 40 | போர்த்துக்கீஸ் கீழ் ஆப்பிரிக்கா | 5 | 2 | 5 | 4 | 9 |
| 41 | ஐக்கியநாடுகள். | | | | | |
| | (a) அட்லாண்டிக்சமுத்திரக் கரை வழியாக | 296 | 290 | 364 | 511 | 959 |
| | (b) பஸிபிக் சமுத்திரக்கரைவழியாக | | | 2 | | |
| 42 | மற்ற அயல்நாடுகள் | 3 | 1 | 5 | 1 | 4 |
| | அயல் நாடுகளின் மொத்தம். | 1,637 | 838 | 2,037 | 1,950 | 2,763 |
| 1 | பங்காளத்திலிருந்து | 58 | 79 | 116 | 78 | 44 |
| 2 | பம்பாயிலிருந்து | 4,290 | 2,755 | 5,384 | 4,091 | 4,236 |
| 3 | சிந்துவிலிருந்து | 3 | 13 | 2 | | |
| 4 | சென்னையிலிருந்து | 803 | 610 | 758 | 632 | 729 |
| 5 | பர்மாவிலிருந்து | 227 | 32 | 18 | 88 | 49 |
| | ஆகமொத்தம். | 5,431 | 3,489 | 6,278 | 4,889 | 5,058 |

† 1923—24-ல் இருந்து அயல் நாடாகக் கருதப்படுகிறது.

# ஏலக்காய் ஏற்றுமதி (இந்தியாவிலிருந்து)

மதிப்புக்கிரயம்.

**B.**

| நெ. | எந்தத் தேசங்களுக்கு. | 1921-22 | 1922-23 | 1923-24 | 1924-25 | 1925-26 |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | பிரிட்டன் | 1,38,235 | 1,82,924 | 8,49,758 | 6,97,402 | 4,80,717 |
| 2 | பாலஸ்தீனம் | | | 250 | 200 | 1,250 |
| 3 | ஏடனும் அதைச்சார்ந்தவைகளும் | 1,10,666 | 68,269 | 61,180 | 60,855 | 80,387 |
| 4 | மெஸபொடேமியா (ஈராக்) | 24,943 | 31,941 | 14,470 | 7,490 | 31,582 |
| 5 | பாரெயின் தீவுகள் | 78,069 | 66,624 | 93,880 | 96,439 | 74,570 |
| 6 | இலங்கை (ஸிலோன்) | 300 | | 28,985 | 1,710 | 1,863 |
| 7 | ஸ்ட்ரெயிட் ஸெட்டில் மெண்ட் | 42,804 | 14,595 | 37,023 | 19,106 | 39,995 |
| 8 | எகிப்து † | 68,637 | 13,240 | | | |
| 9 | நன்னம்பிக்கைமுனை (Cape of good Hope) | | 220 | 1,000 | 150 | 35 |
| 10 | நேடால் | 6,030 | 4,200 | 6,250 | 5,435 | 8,705 |
| 11 | ஜான்ஜீ பாரும் பெம்பாவும் | 6,862 | 7,170 | 13,100 | 8,870 | 6,785 |
| 12 | கென்யா | 8,302 | 7,790 | 10,000 | 5,060 | 8,695 |
| 13 | டன்கனிகா | 1,325 | | 500 | 900 | 900 |
| 14 | சோமாலி லாண்டு | 2,600 | | | | |
| 15 | ஆங்கில எகிப்திய சூடான் | 35,986 | 23,315 | 53,462 | 7,533 | 9,250 |
| 16 | மோரிஸஸ் | 6,536 | 4,809 | 5,428 | 5,670 | 4,450 |



| நெ. | எந்தத் தேசங்களுக்கு. | 1921-22 | 1922-23 | 1923-24 | 1924-25 | 1925-26 |
|---|---|---|---|---|---|---|
| 17 | பிரிட்டிஷ் கயானா | | 93 | 189 | 116 | 1,475 |
| 18 | பீஜித் த்வீபம் | 1,576 | 1,558 | 1,385 | 1,[illegible]24 | 1,5[illegible] |
| 19 | பிரிட்டிஷாருக்குச் சொந்தமான மற்ற இடங்கள் | 1,213 | | 107 | 1,103 | 1,[illegible]99 |
| | பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் மொத்தம். | 5,24,239. | 4,15,76[illegible]. | 11,76,917 | 9,19,561. | 7,53,84[illegible]. |
| 20 | பின்லாண்டு | | | | | 4,970 |
| 21 | ஸ்வீடன் | | | 49,445 | 77,966 | 1,53,513 |
| 22 | [illegible] | | | 15,695 | 12,760 | 21,800 |
| 23 | டென்மார்க் | | | 85,439 | 57,532 | 30,150 |
| 24 | ஜெர்மனி | | | 1,35,933 | 1,15,051 | 1,77,271 |
| 25 | நெதர்லாண்டுகள் | | | 3,900 | 25,560 | 7,400 |
| 26 | பெல்ஜியம் | 5,432 | | 5,250 | 5,250 | 5,000 |
| 27 | பிரான்ஸ் | | 5 | | | 22,670 |
| 28 | ஸ்பெயின் | | | | 11,840 | 23,563 |
| 29 | இடாலி | | | | 2,152 | |
| 30 | ஆசிய துருக்கி | 1,925 | | | | |
| 31 | சிரியா | 10,125 | 10,650 | 24,300 | 23,550 | 81,311 |
| 32 | ஆர்மேனியா | | 3,862 | | | |
| 33 | மாஸ்கட்டும் துருஷல் ஓமானும் | 25,796 | 19,709 | 13,053 | 16,[illegible]4 | 16,501 |
| 34 | அரேபியாவிலுள்ள சுதேச சமஸ்தானங்கள் | 95,742 | 35,117 | 26,5[illegible]0 | 36,330 | 20,400 |
| 35 | பெர்ஷியா | 49,400 | 17,815 | 33,712 | 25,5[illegible]5 | 67,671 |
| 36 | ஜாவா | 950 | 250 | 375 | 2,[illegible]00 | 1,497 |
| 37 | சயாம் | | | 315 | 1,505 | 675 |
| 38 | ஜப்பான் | 12,449 | 5 | 1,765 | 4,538 | 550 |
| 39 | எகிப்து † | | | 64,20[illegible] | 23,435 | 25,527 |
| 40 | போர்த்துகீசிய கிழ ஆப்பிரிக்கா | 1,100 | 450 | 1,400 | 1,190 | 2,450 |
| 41 | ஐக்கிய மாகாணங்கள் | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (A) அட்லாண்டிக் சமுத்திரக்கரை வழியாக | 36,500 | 54,300 | 1,21,250 | 2,27,426 | 3,76,171 |
| (B) பஸிபிக் சமுத்திரக்கரை வழியாக | | | 145 | | |
| 42. மற்ற அயல் நாடுகள் | 435 | 40 | 1,207 | 206 | 1,200 |
| அயல் நாடுகளில் மொத்தம் | 2,39,854. | 1,45,263. | 5,79,851. | 6,72,130. | 10,07,175 |
| 1 வங்காளத்தில் இருந்து | 8,940 | 13,077 | 45,866 | 15,126 | 9,839 |
| 2 பம்பாயில் " | 6,14,842 | 4,49,076 | 14,81,994 | 13,84,143 | 15,12,229 |
| 3 சிந்துவில் " | 349 | 2,100 | 440 | | 14 |
| 4 சென்னையில் " | 1,42,722 | 95,124 | 2,26,657 | 1,88,392 | 2,34,779 |
| 5 பர்மாவில் " | 7,290 | 2,650 | 1,811 | 4,227 | 4,160 |
| ஏகமொத்தம் | 7,74,143. | 5,62,027. | 17,53,768 | 15,91,893 | 17,61,021 |



## ஏலக்காய் ஏற்றுமதி
### (திருவாங்கூரிலிருந்து)

| | ஆண்டு | நிறை அந்தர் | கிரயம் பி. ரூபாய் |
|---|---|---|---|
| 1. | 1088 | 3,227 | 8,55,532 |
| 2. | 1089 | 3,569 | 9,11,448 |
| 3. | 1090 | 6,287 | 7,73,724 |
| 4. | 1091 | 6,179 | 6,82,135 |
| 5. | 1092 | 5,717 | 6,20,852 |
| 6. | 1093 | 18,811 | 12,24,375 |

## ஏலக்காய் ஏற்றுமதி
### (மைசூரிலிருந்து)

| | வருஷம் | மணங்கு | கிரயம் ரூ. |
|---|---|---|---|
| 1. | 1919—20 | 7,422 | 8,06,640 |
| 2. | 1920—21 | 8,487 | 9,86,684 |
| 3. | 1921—22 | 8,301 | 8,46,418 |
| 4. | 1922—23 | 6,638 | 11,52,411 |
| 5. | 1923—24 | 8,214 | 16,92,790 |
| 6. | 1924—25 | 5,837 | 18,29,689 |

ஒரு மணங்கு 82 2/7 பவுன் கொண்டது.

குறிப்பு:—

1924-௵ ஏப்ரல்-மீ த்தில் ஒவ்வொரு 24 பவுன் எடை ஏலக்காயும் ரூ 87 ஆக விற்றிருக்கிறது. ஆனால் அதே வருஷம் டிசம்பர்-மீ த்திலிருந்து விலை யேற ஆரம்பித்து 1925ம் ௵ மார்ச்-மீ த்தில் அதே எடை ரூ 120 ஆக மைசூரில் விற்றிருக்கிறது.

ஆசிரியர்.

159607

ஏல விவசாயி.

## விவசாயப் பழமொழிகள்.

(72-ம் பக்கத் தொடர்ச்சி)

37. அடர விதைத்து ஆழ உழு.
38. ஆடர்க்கிளை அப்பொழுதே பார்; புழுக்களைப் பின்னாலே பார்.
39. பட்டத்தைவிட்டுப் பயிரிடாதே.
40. களர்ந்த பயிர் இருந்து வளரும்.
41. கதிர் களைந்தும் களை பிடுங்கு.
42. கிளைக்கிறபோதே களையைக்கிள்ளு.
43. களையெடுக்காதான் கமம் பாழ்.
44. பயிருக்குக் களையெடுத்தால் பலனை மிக அடைவார்.
45. களையெடாதவன் விளைவெடான்.
46. களையெடுத்தால் முளைபெருக்கும்.
47. வெட்டிக் களையெடுத்தால் கட்டு முக்கலங்காணும்.
48. களை பிடுங்காப் பயிர் கால் பயிர்.
49. கவடிருந்த நெஞ்சும் களையிருந்த பயிரும் கடைத்தேறாது.
50. கோரை குடியைக் கெடுக்கும்.
51. அறுகுமுளைத்த கொல்லையும் அரசரோடெதிர்த்த குடியும் ஈடேறாது.
52. அடங்காப்பெண்டிரைக் கொண்டவனும் கெட்டான், அகங்காட்டை உழுதவனும் கெட்டான்.
53. பருவத்தே பயிர்செய்.
54. காலத்தில் பயிர்செய்தால் கடன்வாங்க வேண்டாம்.
55. பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு.
56. பட்டம் தப்பினால் நட்டம்.
57. சித்திரைமாதத்தில் சீராய் விதை விதைத்தால் பத்துமாற்றுப் பசும்பொன் அதில் விளையும்.


திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கு ஏற்ற துணைவன் எவன்?

ஏல விவசாயிகளுடைய நலம் நாடிச் சலியாது உழைப்பவன் எவன்?

ஏல விவசாயிகளின் நிலைமையை உள்ளபடி உரைப்பவன் எவன்?

# அவனே "ஏல விவசாயி"

ஆகையால் அவனை ஆதரியுங்கள்.

---

குறைந்த விகிதம்! நிறைந்த இலாபம்!!

நல்ல இடம்! நாணயமான கனவான்கள்!!

உங்களுக்கு அதிக இலாபம் அடைய ஆசையா?

உங்கள் வியாபாரத்தை விருத்தியாக்க விருப்பமா?

உங்கள் பெயரும் பொருளும் ஏல விவசாயிகள் வீடுகளிலெல்லாம் உலாவ இஷ்டமா?

பின் ஏன் தாமதிக்கிறீர்கள்?

உடனே "ஏல விவசாயி"யில் விளம்பரம் செய்யுங்கள்.

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூ. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, ,, | ,, | 5—8—0 |
| கால் பக்கத்திற்கு | ,, ,, | ,, | 3—0—0 |

எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட காலம் விளம்பரம் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
"ஏல விவசாயி"